சுருக்கம்

இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம் – சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க "நம்மைக் காக்கும் 48" என்ற புதிய திட்டத்தினைச் செயல்படுத்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (அஉதி–1) துறை

அரசாணை (நிலை) எண். 564

நாள்: 17.12.2021
திருவள்ளுவராண்டு–2052
பிலவ, மார்கழி – 02

படிக்கப்பட்டது:

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் அவர்களின் கடித ந.க.எண்.6906/தநாசுதி/காப்பீடு/2021 நாள்: 29.11.2021.

*****

ஆணை:

தமிழ்நாடு அரசு அனைத்து மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவச் சேவைகளை செயல்படுத்தி வருகிறது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

- "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18–11–2021 அன்று தலைமைச் செயலகத்தில், சாலைப் பாதுகாப்பு குறித்தும், சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கும் சாலை உயிரிழப்புகளைத் தடுப்பதற்கும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முன்னெடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.
- அதிக எண்ணிக்கையில் சாலை விபத்துகள் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், சாலைகளின் வடிவமைப்பு குறித்தும், காவல்துறை உள்ளிட்ட பொதுமக்களுக்கு முதலுதவி பயிற்சி அளிப்பது, சாலை விபத்துகள் குறித்து சிறப்பு சட்டங்கள் இயற்றுவது, புதிய தொழில் நுட்பங்கள் செயல்படுத்துவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக இக்கூட்டத்தில் ஆலோசனை மேற்கொண்டு, அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆய்வுசெய்து, விபத்துகளைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.
- மேலும், சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முதல் 48 மணிநேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவைத் தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில், "நம்மைக் காக்கும் 48" – அனைவருக்கும் முதல்

48 மணி நேர அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கட்டணமில்லா மருத்துவ உதவித் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்".

3. தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர், இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் மற்றும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான உள்கட்டமைப்புகளுடன் கூடிய இதர தனியார் மருத்துவமனைகள் கண்டறியப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். மேலும், "நம்மைக் காக்கும் 48" திட்டத்தில் பின்வரும் நடைமுறைகள் செயல்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்:–

- முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள் / இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவர் என அனைவருக்கும் தமிழக எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.
- தமிழக எல்லைக்குள் சாலை விபத்தால் பாதிக்கப்பட்டோரை உடனடியாக அருகில் உள்ள அண்டை மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட (இன்னுயிர் காப்போம் திட்டம் (ம) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்) மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வரும்போது, அம்மருத்துவமனை இத்திட்டத்தின்படி அரசு நிர்ணயித்த கட்டணத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இலவச சிகிச்சை வழங்கும்.
- உத்தரவாத அடிப்படையில் (Assurance Mode) செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டு முதல் கட்டமாக ரூ.50 கோடி நிதி இத்திட்டத்திற்கென ஒதுக்கப்படும்.
- நபர் ஒருவருக்கு ரூ. 1 லட்சம் வரை செலவினத்தில் (ceiling limit) 81 தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை முறைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.
- சேத குறைப்பு அடிப்படையில் (Damage Control) உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளும் வகையில் ஆவன செய்யப்பட்டுள்ளது.
- 12 மாத காலத்திற்கு இத்திட்டம் உத்தரவாத முறையில் செயல்படுத்தப்பட்டு, அதன் பிறகு வருடாந்திர செலவினம் மதிப்பாய்வு செய்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் இத்திட்டத்தினை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- <u>வழிகாட்டுநெறிமுறைகள்</u>

    1) சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணிநேரம் வரை, அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறைகளில் (81 treatment packages) சிகிச்சை மேற்கொள்ளலாம்.

2) 48 மணிநேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிலையற்றவராக (unstable) இருந்தால் அல்லது மேலும் தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், பின்வரும் மூன்று வழிகாட்டுதல்களின் படி மேற்கொள்ளலாம்.

| வ. எண். | வகைபாடு | சிகிச்சைமுறை |
|---|---|---|
| 1 | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இருந்தால் | நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், நோயாளியை நிலைப்படுத்தி அம்மருத்துவ மனையிலேயே மேலும் சிகிச்சை தொடரலாம் |
| 2 | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால் | நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் இல்லை என்றால், நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும். |
| 3 | சாலைவிபத்தில் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனைக்கு செல்ல தயாராக இல்லை என்றாலோ (அல்லது) தனியார் காப்பீட்டிலோ (அல்லது) பணம் செலுத்தியோ சிகிச்சையைத் பெறவிரும்பினால் | நோயாளியை நிலைப்படுத்தி அதே மருத்துவமனையிலோ அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் பிற மருத்துவமனையிலோ சிகிச்சைக்கான கட்டணத் தொகையை தனிநபரே செலுத்தி சிகிச்சையைத் தொடரலாம். |

- "நம்மைக்காக்கும் 48" திட்டத்தில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை/ அரசு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு தலைமை மருத்துவர் (Emergency Department) மருத்துவமனையின் முதல்வர், முதன்மை குடிமை மருத்துவர் மற்றும் மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு பொறுப்பு அலுவலர் (Hospital Trauma Nodal officer) ஆகியோர்களுக்கு புது வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு செலவிடும் தொகையினை உத்தரவாத முறையில் வழங்கப்படும்.
- சிகிச்சைக்கான தொகை ரூ.50,000/-க்கு மேல் வழங்கும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | அரசு மருத்துவமனைக்கு விடுவிக்கப்படும் கணக்கிற்கான தலைப்பு | தொகையின் விழுக்காடு |
|---|---|---|
| 1 | மருத்துவ குழுவிற்கான ஊக்கத் தொகை | 15% |
| 2 | அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பல்வேறு நுகர்பொருட்கள் கொள்முதல் | 40% |
| 3 | உள்கட்டமைப்பு | 40% |

| | | |
|---|---|---|
| 4 | மாநில அவசர சிகிச்சைத் துறைத் தொகுப்பு நிதி (Corpus Fund)-யிலிருந்து மாவட்ட மாநில விபத்து மற்றும் அவசர சிகிச்சை பயிற்சி மையங்களுக்கு தேவைக்கேற்ப விடுவிக்கப்படும்<br>• சென்னை -இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை<br>• மதுரை - இராஜாஜி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை<br>• சேலம் - மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை<br>• வேலூர் - வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை<br>• கடலூர் - அரசு தலைமை மருத்துவமனை | 5% |

4. மேலும், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் கீழ்க்காணும் கருத்துருவின் மீது ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

- ❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டாளர் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்துதல்.
- ❖ தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சாலை விபத்துக்குள்ளாகி உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் அனைவருக்கும் முதல் 48 மணி நேர கட்டணமில்லா அவசர சிகிச்சை அளிக்க "நம்மைக் காக்கும் 48" திட்டத்தினை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்துதல்.
- ❖ தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம் மாநில அரசால் வழங்கப்படும் வரவு - செலவு (Budget) நிதியின் புதிய கணக்குத்தலைப்பு (Head of Account) தொடங்கி அதன் வாயிலாக பெறப்படும் ரூபாய் 50 கோடி தொகுப்பு நிதிக்கான வங்கிக் கணக்கு (Corpus fund account) தொடங்கப்பட்டு அதிலிருந்து உத்தரவாத முறையில் (Assurance mode) "நம்மைக்காக்கும் 48" திட்டத்தினை செயல்படுத்துதல்.

5. மேற்காணும், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

- ❖ முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள் / இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவர் என அனைவருக்கும், தமிழக எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட நேர்வில் முதல் 48 மணி நேரத்திற்கான உயிர்காக்கும் உயர் மருத்துவ சிகிச்சையினை அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக வழங்க "நம்மைக் காக்கும் 48" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- ❖ இத்திட்டம் மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள 81 அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறைகளில் செயல்படுத்தப்படும்.
- ❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டாளர் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- ❖ தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சாலை விபத்துக்குள்ளாகி உள் நோயாளியாக அனுமதிக்கப்படும் அனைவருக்கும் முதல் 48 மணி நேர கட்டணமில்லா அவசர சிகிச்சை அளிக்க "நம்மைக்காக்கும் 48" திட்டத்தினை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படும்.
- ❖ தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம் மாநில அரசால் வழங்கப்படும் வரவு - செலவு (Budget) நிதியின் புதிய கணக்குத்தலைப்பு (Head of Account) தொடங்கி அதன் வாயிலாக பெறப்படும் ரூபாய் 50.00 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) தொகுப்பு நிதிக்கான வங்கிக் கணக்கு (Corpus fund account) தொடங்கப்பட்டு, அதிலிருந்து உத்தரவாத முறையில் (Assurance mode) "நம்மைக்காக்கும் 48" திட்டம் செயல்படுத்தப்படும்.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் - 80 பொது - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - AF நம்மைக் காக்கும் 48 திட்டம் - 310 பங்குத் தொகைகள் - 01 குறிப்பிட்ட நிதிக்கு தொகை கொடுத்தல்.
(த.தொ.கு 2210 80 800 AF 31001)

7. மேலே பத்தி 6-இல் துவங்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் அவர்கள், மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவர். மேற்படி புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு.1)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு திட்ட இயக்குநர் (பொ), தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-22 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.1/சுகாதாரம்-2)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு திட்ட இயக்குநர் (பொ), தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.57823/சுகாதாரம்-2/2021, நாள்: 17.12.2021 இசைவுடனும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1197 (ஆயிரத்து நூற்று தொண்ணூற்றேழு) உடனும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை-6.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை-6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை-6.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை- 10
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை-8.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை - 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை -18.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.

நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
நிதி (சுகாதாரம்-2) துறை, சென்னை-9.
அனைத்துத் துறைகள், சென்னை-9.
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் (தகவு/அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை - 9
இ.கோ/ந.கோ

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17.12.2021
பிரிவு அலுவலர்